# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1928/28 - 2015 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2015.08.21

*1928/28 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2002, மாச்சு மாதம் 01 ஆம் திகதிய 1225/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பிற்கும், அதற்கு காலத்திற்குக் காலம் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கும் அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்டது என கருதுகின்ற அல்லது ஏதேனும் படிமுறைக்கு பாதகம் ஏற்படாத வகையில் பின்வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆணையின் படி,*

*டி.எம்.எல்.சீ. சேனாரத்ன*
*செயலாளர்,*
*அரச சேவை ஆணைக்குழு.*

*2015, ஓகத்து 21 ஆந் திகதி*

1. ***அமுலாக்கப்படும் திகதி*** : *இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு 2015.04.17 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும்.*

2. ***நியமன அதிகாரி*** : *அரசாங்க சேவை ஆணைக்குழு*

3. **சேவைக்குரிய உத்தியோகத்தர் வகை தொடர்பான விபரங்கள்** :

   3.1 ***உத்தியோகத்தர் வகை:*** *நிறைவேற்று, சிரேஷ்ட நிறைவேற்று.*

   3.2 ***தரங்கள்:*** *தரம் III*
   *தரம் II*
   *தரம் I*
   *விசேட தரம்*

4. **சேவையின் பணி**:

*இலங்கையின் ஒட்டுமொத்த மனித வள அபிவிருத்திக்காக பொதுவான கல்வியுடன் தொடர்புடைய தேசிய கல்விக் கொள்கைகளை வகுப்பதற்கு உதவியாக இருத்தலும், அமுல் செய்தலும், வழிநடாத்தல், ஒழுங்குமுறைப்படுத்தலும், மதிப்பீடும், இரண்டாம்நிலைக் கல்விக்கும், இரண்டாம் நிலைக் கல்விக்குப் பிந்திய கல்விக்கும் இடையில் தொடர்பினைக் கட்டியெழுப்புதல், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்வதினூடாக கல்வி முறைமையில் எல்லா நிறுவனங்களையும் முகாமை செய்வதினூடாகவும், மேற்பார்வை செய்வதினூடாகவும் கல்வியின் தரத்தில் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.*

5. **சம்பளத் திட்டம் :**

5.1 **சம்பளக் குறியீட்டு இல.:**
சிரேஷ்ட நிறைவேற்று - SL – 3 – 2006
நிறைவேற்று -SL – 1 – 2006

5.2 **மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்**
சிரேஷ்ட நிறைவேற்று - ரூ. 42,390 -12 x 1,310 – 58,110/=
நிறைவேற்று - ரூ. 22,935 – 10x645 – 8x790 – 17x1050 - 53,555/=

5.3 **பதவிக்குரிய தரங்களும், அந்தந்த தரங்களுக்குரிய ஆரம்பச் சம்பளப்படி நிலையும்.**

| தரம் | ஆரம்பச் சம்பளப்படி நிலை | ஆரம்பச் சம்பள நிலை |
|---|---|---|
| III | படி 01 (SL – 1 – 2006) | ரூ 22,935 |
| II | படி 12 (SL – 1 – 2006) | ரூ 30,175 |
| I | படி 20 (SL – 1 – 2006) | ரூ 36,755 |
| விசேட | படி 01 (SL – 3 – 2006) | ரூ 42,390 |

6. **சேவைக்குரிய பதவிகள்:**

6.1 **சேவைக்குரிய பதவிகள் :**

| | தரம் | அனுமதிக்கப்பட்ட முழு பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொதுச் சேவை ஆளணி | விசேடம் | 04 |
| | தரம் I | 238 |
| | தரம் II | 429 |
| | தரம் II/III | 753 |
| விசேட சேவை ஆளணி | தரம் II/III | 1267 |
| | மொத்தம் | 2691 |

**குறிப்பு**: சேவைக்குரிய பதவி வகுப்புகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் “அ” அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

6.2

**மொத்த பதவிகளின் தொகை :**
பொது ஆளணித் தொகை
தரம் I 238
தரம் II 429
தரம் II/III 753

விசேட ஆளணித் தொகை
தரம் II/III 1267

ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு பதவி உயர்வு செய்வது தொடர்பாக III, II மற்றும் I தரங்கள் இணைந்த ஆளணி எண்ணிக்கைக்கு உரித்ததொன்றாகக் கருதப்படும்.

**குறிப்பு**:

(i) இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் தரம் III விசேட ஆளணிக்குரிய உத்தியோகத்தர்களுக்கு பொது ஆளணிக்குரிய பதவிகளை வகிக்க முடியாது.

(ii) இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II மற்றும் III பொது ஆளணிக்குரிய உத்தியோகத்தர்கள் விசேட ஆளணியினருக்குரிய பதவிகளை வகிக்க முடியாது.

*6.3* **பதவியின் தன்மை** : நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்

7. **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

*7.1* ***ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வீதம்***

| *வகை* | *பொதுவான பதவியணியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற வீதம்* | *விசேட பதவியணியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற வீதம்* |
|---|---|---|
| திறந்த | 50% | - |
| மட்டுப்படுத்தப்பட்ட | 20% | 100% |
| திறமையும் சேவை மூப்பும் | 30% | - |

- விசேட பதவியணியிலும், பொதுவான பதவியணியிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களைத் தனித் தனியாகக் கணிப்பிட்டு, மேற்சொன்ன வீதத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

- திறந்த, சேவை மூப்பு, திறமை ஆகிய பிரிவுகளின் கீழ், பொதுவான பதவியணியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு மட்டுமே ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

- விதிவிலக்கு: விசேட பதவியணியின் கீழ், தகவல் தொழில்நுட்பப் பாடத்திற்காக, அப் பாடத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 50% வீதம் தாண்டாதவாறு, திறந்த போட்டிப் பரீட்சை மூலம், இச் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 05 வருடங்கள் வரை தேவைக்கேற்றவாறு ஆட்சேர்ப்புச் செய்யலாம்.

*7.2* ***திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்:***

*7.2.1* ***ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற தரம்: இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்*** III

*7.2.2* ***தகைமைகள்:***

*7.2.2.1* ***கல்வித் தகைமைகள்:***

அ. பொதுவான பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. விசேட பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் முறைமை பாடத்திற்காக)

தகவல் தொழிநுட்ப விடயத்திற்காக மற்றும் தொழினுட்பவியல் விடயங்களின் கீழ் உயிரியல் முறைமை தொழினுட்ப பாடத்திற்காக உரிய பாடப்பரப்புக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

இ. விசேட பதவியணிக்கான ஆட்சேர்ப்பு (இயந்திரவியல் தொழினுட்பம்)

இயந்திர, நிர்மாணித்தல், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளில் ஒன்றுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர்தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை பெற்றிருத்தல் (NDES) பெற்றிருத்தல்.

*7.2.2.2* ***உடற் தகைமைகள்:***
ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

*7.2.2.3* ***பிற:***

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றக் கூடிய ஆகக் கூடிய தடவைகளின் எண்ணிக்கை 02 ஆகும்.

(iv) இலங்கை கல்வி நிருவாகச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டுமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அத் தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3 **வயதெல்லை:**
வயது 22 வருடங்களுக்குக் குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7.2.4 **ஆட்சேர்ப்பு முறை:**

7.2.4.1 **எழுத்து மூலப் பரீட்சை:**

நான்கு (04) வினாப் பத்திரங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் அனுபந்தம் "1" இல் காட்டப்பட்டுள்ளது.

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்தியடைவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| (I) கிரகித்தல் | 100 | 40% |
| (II) நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| (III) பொது அறிவு | 100 | 40% |
| (IV) கட்டுரையும் சுருக்கம் எழுதுதலும் | 100 | 40% |

7.2.4.1.1 **பரீட்சையை நடாத்தும் அதிகாரி** : பரீட்சை ஆணையாளர் நாயகம்

7.2.4.2 **வாய்மொழிப் பரீட்சை** :(25 புள்ளிகள்)
**நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் :**

பதவிக்கேற்ற கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தர்க்கரீதியில் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தொடர்பாடல் திறன் பற்றியும் பரீட்சிக்கப்படும்.

**குறிப்பு** : எழுத்து மூலப்பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளிடையே தகைமை பெறுவோர் வாய்மொழிப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தளவு 40% புள்ளிபெறும் விண்ணப்பதாரிகளிடையே வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது எதிர்பார்த்த தொகை மற்றும் வெற்றிடங்களின் அளவில் 25% அளவாகிய இரண்டின் கூட்டுத்தொகையாக வரும் தொகை மட்டுமே ஆகும். விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட புள்ளித் தொகை வாய்மொழிப் பரீட்சைக் குழுவுக்கு வழங்கப்படமாட்டாது. புள்ளிகள் வழங்கப்படும் முறை கல்வி அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு விண்ணப்பம் கோரும் சந்தர்ப்பத்தில் பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

7.2.4.2.1 **வாய்மொழிப் பரீட்சைக் குழுவை நியமிக்கும் அதிகாரி :**
அரச சேவை ஆணைக்குழு

7.2.5 **விண்ணப்பம் கோரும் முறை :**
அரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

7.3 **மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :**

7.3.1 **ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற தரம் :**
இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III (பொதுவான மற்றும் விசேட பதவியணிக்கு)

*7.3.2* **தகைமைகள்:**

*கீழ்க் காட்டப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்கப் பாடசாலைகளிலும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு உதவி வழங்கப்படுகின்ற பாடசாலைகளிலும், பிரிவெனாக்களிலும் சேவையாற்றும் பதவி நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியர்கள் / அதிபர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெறுகின்றனர்.*

**குறிப்பு**: *இவ் அனுசரணையானது, அரசாங்கத்தினால் உதவி வழங்கப்படுகின்ற பாடசாலைகளிலும், பிரிவெனாக்களிலும் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவதற்கான உரிமையாக மாட்டாது.*

*7.3.2.1* **தகைமைகள் :**

(அ) **பொதுவான பதவியணி:**
**கல்வித் தகைமைகள் :**

(i) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து அல்லது தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் பட்டம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக இருத்தல்;*

*அல்லது*

(ii) *போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக இருத்தல்;*

*அல்லது*

(iii) *இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல்.*

(ஆ) **விசேட பதவியணி:**
**கல்வித் தகைமைகள் :**

(i) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிய பாடத்தை உள்ளடக்கிய பட்டம் பெற்ற ஆசிரியராக இருத்தல்;*

*அல்லது*

(ii) *உரிய பாடத்தில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது உரிய பாடத்தில் போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக இருத்தல்;*

*அல்லது*

(iii) *தொழினுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழினுட்பவிடயப் பாடப்பரப்பிற்காக இலங்கை உயர்தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா* (HNDE) *அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழினுட்ப டிப்ளோமா* (NDT) *அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை* (NDES) *பெற்றிருத்தல். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழினுட்பம் தொடர்பான டிப்ளோமா* (DT) *அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழினுட்ப தகைமை மட்டம் 6 க்குரிய உயர் டிப்ளோமா* NVQ Level 6) *ஆசிரியராயிருத்தல்.*

*(விசேட பதவியணிக்கு உரிய விடயப் பரப்புக்கள் அட்டவணை "ஆ" இல் காட்டப்பட்டுள்ளது)*

*7.3.2.2* **அனுபவம்:**

(அ) **பொதுவான பதவியணி:**

(i) *பதவி நிரந்தரமாக்கப்பட்டதும், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுக் கொண்டதுமான ஆசிரியரொருவராக இருப்பின், குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றிருத்தல்; அல்லது*

(ii) ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக அல்லது போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக இருப்பின், பதவி நிரந்தரமாக்கப்பட்டதும், குறைந்த பட்சம் கிட்டிய ஏழு (07) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ; அல்லது

(iii) ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக அல்லது போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியராக இருப்பின், பதவி நிரந்தரமாக்கப்பட்டதும், குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் ; அல்லது

(iv) இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அதிபர் சேவைக்குரிய பதவியொன்றில் குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல்.

(ஆ) **விசேட பதவியணி:**

(i) குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்குரிய பட்டதாரி ஆசிரியராக ஐந்து (05) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைக் கொண்ட பட்டம் பெற்ற தகைமையைக் கொண்ட ஆசிரியராக இருப்பின், பதவி நிரந்தரமாக்கப்பட்ட குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான குறித்த பாடத்தில் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்; அல்லது

(ii) குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக, குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருப்பின், பதவி நிரந்தரமாக்கப்பட்ட குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான குறித்த பாடத்தில் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்; அல்லது

(iii) குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியராக இருப்பின், பதவி நிரந்தரமாக்கப்பட்ட, குறைந்த பட்சம் கிட்டிய ஏழு (07) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான குறித்த பாடத்தில் கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(iv) எவ்வாறாயினும் விசேட கல்வி/ தொழில்நுட்பம்/ உடற் கல்வி/ மேலைத்தேய சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு, குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏழு (07) வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட ஆசிரியராக இருப்பின், குறித்துரைக்கப்பட்ட பாடத்திற்கு/ பாடப்பரப்பிற்குரிய ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக் கொண்டதன் பின், பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்த பட்சம் கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் குறித்துரைக்கப்பட்ட பாடத்தைத் தொடர்ச்சியாக கற்பித்திருக்கும் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

**குறிப்பு**: இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலாக்கப்படும் தினத்திலிருந்து ஐந்து (05) ஆண்டுகள் செல்லும் வரை பொறியியல் தொழில்நுட்ப விடயப்பரப்பின் கீழ் விண்ணப்பிப்பதற்காக ஆசிரியர் சேவையின் ஆகக் குறைந்தது கிட்டிய மூன்று (03) வருட தொடர்ச்சியான திருப்திகரமான உரிய பாடப்பரப்பினைக் கற்பிக்கின்ற அனுபவம் இருத்தல்.

*7.3.2.3* **ஏனையவை :**

(i) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரித்தான உரிய உடல் உள பொருத்தப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக எந்தவொரு அபேட்சகரும் மூன்று முறைக்கு (03) மேல் தோற்றுவதற்கு அனுமதி இல்லை என்பதுடன் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்குமிடத்து ஐந்து (05) முறைகளுக்கு மேல் எந்த அபேட்சகர்களுக்கும் அனுமதி இல்லை.

(iii) இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக உள்ள மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அந்த தகைமைகளை சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தான் விண்ணப்பிக்க தகைமை கொண்டுள்ள சேவையின் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றிருக்கின்ற சேவையின் நியமனம் உறுதி செய்யப்படப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) கிட்டிய ஐந்து (05) ஆண்டினுள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.3.2.4 **வயதெல்லை** : வயது 50 வருடங்களுக்கு மேற்படலாகாது.

7.3.3 **ஆட்சேர்ப்பு முறை:**

7.3.3.1 **எழுத்து மூலப் பரீட்சை:**

மூன்று (03) வினாப் பத்திரங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் அனுபந்தம் "ஆ" வில் காட்டப்பட்டுள்ளது.

| பாடங்கள் | | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| I | பொது அறிவும் நுண்ணறிவும் | 100 | 40% |
| II | ஒப்பீட்டுக் கல்வி | 100 | 40% |
| III | கல்வி நிருவாகமும் முகாமையும் | 100 | 40% |

7.3.3.1.1 **எழுத்து மூலப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி**: பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

7.3.3.2 **வாய்மொழி மூலப் பரீட்சை** (25 புள்ளிகள்)

**நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் :**

பதவியுடன் தொடர்புடைய கற்றல், கற்பித்தல் தொழிற்பாடு, வாதம், பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தொடர்பாடல் திறன் என்பன பரீட்சிக்கப்படும்.

**குறிப்பு**: எழுத்து மூலப் பரீட்சையில் எல்லா வினாப் பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுள், தகைமை அடைந்தோர் வாய்மொழிமூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40% ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளிடையே வாய்மொழித் தேர்வுக்கு அழைப்பது ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் வெற்றிடமாகவுள்ள 50 வீதமாக இருக்கின்ற தொகை என்கின்ற இரண்டின் தொகையையும் ஒட்டுமொத்தமாக வருகின்ற எண்ணிக்கையாகும். விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வாய்மொழி மூலப் பரீட்சை குழாமுக்கு வழங்கப்படமாட்டாது. புள்ளிகள் வழங்கப்படும் முறைமை கல்வி அமைச்சு செயலாளரினால் தயாரிக்கப்பட்டு அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற நேரத்தில் பகிரங்கப்படுத்தப்படும்.

7.3.3.3 **வாய்மொழிமூல பரீட்சை சபையை நியமனம் செய்யும் அதிகாரி :**
அரச சேவை ஆணைக்குழு

7.4 **சேவை மூப்பு, திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்:**

7.4.1 **ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற தரம்:**

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III (பொதுவான பதவியணிக்கு)

7.4.2 **தகைமைகள் :**

7.4.2.1 **அனுபவம்:**
இலங்கை அதிபர் சேவையின் தரம் I இல் குறைந்த பட்சம் மூன்று (03) வருட சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

7.4.2.2 **உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7.4.2.3 **ஏனையவை:**

(i) சேவை மூப்பு, திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு, மூன்று (03) தடவைக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாதென்பதுடன், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை மூப்பும், திறமையும் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் இரண்டையும் எடுத்துக் கொண்டால், எந்தவொரு பரீட்சார்த்திக்கும் ஐந்து (05) தடவைக்கு மேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை மூப்பு, திறமை அடிப்படையிலான போட்டிப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு, அத் தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) இலங்கை அதிபர் சேவையில் பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.

(iv) இலங்கை அதிபர் சேவைக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் அல்லது விலக்களிக்கப்பட்டிருத்தல்.

7.4.2.4 **வயதெல்லை:**
வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்

7.4.3 **ஆட்சேர்ப்பு முறை:**

7.4.3.1 எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளினதும், சேவை மூப்பின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையொன்று நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சைக்கான பாடத் திட்டம் அனுபந்தம் "3" இல் காட்டப்பட்டுள்ளது.

| பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| I ஒப்பீட்டுக் கல்வி | 100 | 40% |
| II கல்வி நிருவாகமும் முகாமையும் | 100 | 40% |

**சேவை மூப்பு:**

இலங்கை அதிபர் சேவையின் தரம் I இல் தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தில், ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளாக விதிக்கப்பட்டுள்ள மூன்று (03) வருடங்களையும் கழித்ததன் பின், அதற்கு மேலதிகமாக தரம் I இல் சேவையாற்றியுள்ள ஒவ்வொரு வருட திருப்திகரமான சேவைக் காலத்திற்கும் ஆகக் கூடியது 60 புள்ளிகள் சேவை மூப்பிற்காக வழங்கப்படும். (முழுமையான வருடத்திற்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்). புள்ளி வழங்கல் நடைமுறைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.4.3.2 **பரீட்சையை நடாத்தும் அதிகாரி:**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

7.4.3.3 **பொதுவான நேர்முகப் பரீட்சை** (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது).

**நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள்:**

ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளும், ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பகிரங்கப்படுத் தப்படுகின்ற அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சித்தல்.

**குறிப்பு**: எழுத்து மூலப் பரீட்சையில் வினாப் பத்திரங்கள் இரண்டிலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள், எழுத்து மூலப் பரீட்சை, சேவை மூப்பு ஆகிய இரண்டிலும் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் திறமை ஒழுங்குமுறைப்படி ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.4.3.3.1 **பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி:** அரசாங்க சேவை ஆணைக்குழு.

**குறிப்பு**: இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்கையில் குறித்ததொரு ஆண்டிற்கு ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய தொகையானது குறித்ததொரு ஆண்டின் யூன் மாதம் 30 ஆம் திகதியில் இருக்கின்ற வெற்றிடத்தின் எண்ணிக்கையாகும்.

08. **வினைத்திறன் காண் தடைப் பரீட்சை:**

8.1.

| **வினைத்திறன் காண் தடைப் பரீட்சை** | **எத்தனை வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது** | **வினைத்திறன் காண் தடைப் பரீட்சையின் தன்மை எழுத்துமூல/ தொழில்சார்/சான்றிதழ் பாடநெறி/பிற** |
|---|---|---|
| I வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் | எழுத்து மூலப் பரீட்சை (அனுபந்தம் 4 ஐப் பார்க்க) |
| II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இற்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் | எழுத்து மூலப் பரீட்சை (அனுபந்தம் 4 ஐப் பார்க்க) |
| III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்டு மூன்று (05) வருடங்கள் கடப்பதற்கு முன் | எழுத்து மூலப் பரீட்சை (அனுபந்தம் 4 ஐப் பார்க்க) |

*8.2* **வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எவ்வெப்போது நடாத்தப்படுமென்பது**: ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

*8.3* **வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி**: பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

*09.* **மொழித் தேர்ச்சி :**

*9.1*

| *மொழி* | *அடைய வேண்டிய தேர்ச்சிகள்* |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன் ஓர் அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சுற்றறிக்கை அம்சங்களின் உரிய மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| இணைப்பு மொழியில் தேர்ச்சி | சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவர், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியில் (ஆங்கில மொழி) தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br><br>**குறிப்பு**: உத்தியோகத்தரொருவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தியை அல்லது உயர் சித்தியை அடைந்திருப்பின் இணைப்பு மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் இத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |

*10.* **தரங்களுக்கு பதவியுயர்த்தல்**:

*10.1* **தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தல்**:
விசேட பதவியணியின் கீழ் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களை, தரம் II இற்குப் பதவியுயர்த்தும் போது, அவர்கள் விசேட பதவியணியின் கீழேயே பதவியுயர்த்தப்படுவர்.

***10.1.1* பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்**:

(i) பதவியுயர்வு பெறுவதற்கான தகைமை பெறும் திகதிக்கு தரம் III இல் குறைந்த பட்சம் பத்து (10) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும், பத்து (10) சம்பள ஏற்றங்களையும் ஈட்டியிருத்தலும் வேண்டும்.

(ii) I வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iii) உரிய மட்டத்திற்குரிய மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) இணைப்பு மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் அல்லது விலக்களிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) கல்வி முகாமைத்துவமும் நிருவாகமும் தொடர்பான திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(vi) பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(vii) தரம் III இல் பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) பதவியுயர்வுத் திகதிக்கு கிட்டிய ஐந்து (05) வருடங்களுக்குள்ளும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ix) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம், பதிவியுயர்வுக்குக் கிட்டிய பத்து (10) வருட காலப்பகுதியில் திருப்திகரமான அல்லது உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல் வேண்டும்.

10.1.2 **பதவியுயர்த்தல் முறை**:
உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தர்களினால் உரிய படிவத்தின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின், தகைமைகளைப் பரீட்சித்து, தகைமை பெறும் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவார். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் அனுபந்தம் “8” இல் காட்டப்பட்டுள்ளது.

10.2 **தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்தல்**

10.2.1 **பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்**:

(i) இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இல் குறைந்த பட்சம் ஏழு (07) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும், ஏழு (07) சம்பள ஏற்றங்களையும் ஈட்டிருத்தலும் வேண்டும்.

(ii) உரிய திகதிக்கு II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iii) உரிய திகதிக்கு திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) பதவியுயர்வுக்குத் தகைமை பெறுவதற்கு, கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதியிலும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(v) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம், பதவியுயர்வுக்குக் கிட்டிய ஏழு (07) வருட காலப்பகுதியில் திருப்திகரமான அல்லது உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல் வேண்டும்.

(vi) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றிலிருந்து, கீழே குறிப்பில் காட்டப்பட்டுள்ள கல்வித் துறையுடன் தொடர்புடைய பாடங்களுள் ஏதேனுமொரு பாடத்திற்குரிய விடயப் பரப்பில் பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பாடப் பரப்பிற்குரியதாக பட்டப் பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

**குறிப்பு**: பொதுவான பதவியணியின் கீழ் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்காக விசேட கல்வி, கல்வி முகாமைத்துவம், கல்வி உளவியல், கல்விக் கொள்கைகள், மூன்றாம் நிலைக் கல்வி முகாமைத்துவம், நூலகம் மற்றும் தகவல் கல்வி, கல்வித் துறையில் மதிப்பீடும் பரீட்சையும் ஆகிய விடயப் பரப்புகள் உரிய விடயப் பரப்புகளாகும்.

10.2.2 **பதவியுயர்த்தல் முறை**:
உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தர்களினால் உரிய படிவத்தின் மூலம் நியமன அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின்,நியமன அதிகாரியினால் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சித்து தகைமை பெறுகின்ற தினத்தில் அமுலுக்கு வருமாறு தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்த்தப்படுவர். (விண்ணப்பிக்க வேண்டிய படிவம் அனுபந்தம் 8 இல் காட்டப்பட்டுள்ளது.)

10.3 **தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல்**

10.3.1 **பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்**:

(i) பதவியுயர்வுக்காக தகைமைகளை பெறுகின்ற தினத்திற்கு நிறைவேற்று சேவை தரத்தில் முதலாவது தரத்தில் ஐந்து (05) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் முதலாம் தரத்தில் பதவியுயர்வு பெற்றதன் பின் சம்பள ஏற்றங்கள் ஐந்தினைப் (05) பெற்றிருத்தல்.

(ii) உரிய திகதிக்கு III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iii) பதவியுயர்வுக்குத் தகைமை பெறுவதற்கு, கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவையையும் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றிலிருந்து, கீழே குறிப்பில் காட்டப்பட்டுள்ள கல்வித் துறையுடன் தொடர்புடைய பாடங்களுள் ஏதேனுமொரு பாடத்திற்குரிய விடயப் பரப்பில் பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பாடப் பரப்பிற்குரியதாக பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) பதவியுயர்வுக்காக தகைமைகள் பெறுகின்ற தினத்தில் நிறைவேற்றுத் தரத்தில் பதினெட்டு (18) ஆண்டுகள் சேவை புரிந்திருத்தல் வேண்டும்.

(vi) உரிய திகதிக்கு திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(vii) பதவியுயர்வுக்கான தகைமை பெறுகின்ற தினத்தில் முன்னதான ஐந்து (05) ஆண்டினுள் வருடாந்த செயலாற்றுகையினை திருப்திகரமாக அல்லது உயர் மட்டத்தில் பேணுதல்.

**குறிப்பு**: பொதுவான பதவியணியின் கீழ் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்காக விசேட கல்வி, கல்வி முகாமைத்துவம், கல்வி உளவியல், கல்விக் கொள்கைகள், மூன்றாம் நிலைக் கல்வி முகாமைத்துவம், நூலகம் மற்றும் தகவல் கல்வி, கல்வித் துறையில் மதிப்பீடும் பரீட்சையும் ஆகிய விடயப் பரப்புகள் உரிய விடயப் பரப்புகளாகும்.

*10.3.2* **பதவியுயர்த்தல் முறை:**

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் சேவையின் முதலாம் தரத்திலுள்ள சேவை மூப்பு திறமையின் பிரகாரம் சேவையில் விசேட தரத்தில் இருக்கின்ற வெற்றிடத்தின் அடிப்படையில் சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல் நியமன அதிகாரியினால் இடம்பெறும்.

*11.* **பதவிகளுக்கு நியமித்தல்**

**11.1 தகைமைகள் :**

| இல. | பதவி | தகைமைகள் |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் | இ.க.நி. சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 2 | பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் | இ.க.நி. சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 3 | கல்வி வெளியீடுகள் ஆணையாளர் நாயகம் | இ.க.நி. சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 4 | பிரதான ஆணையாளர் – ஆசிரியர் கல்வி | இ.க.நி. சேவையின் தரம் I இல் 05 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 5 | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் I இல் 05 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 6 | கல்விப் பணிப்பாளர் (கல்வி அமைச்சு) | இ.க.நி. சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |

| இல. | பதவி | தகைமைகள் |
|---|---|---|
| 7 | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 8 | வலயக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 9 | பரீட்சைகள் ஆணையாளர் | இ.க.நி. சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 10 | கல்வி வெளியீடுகள் ஆணையாளர் | இ.க.நி. சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 11 | அதிபர் | இ.க.நி. சேவையின் தரம் I/ II/ III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 12 | பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அமைச்சு) | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 13 | பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர்/ உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 14 | பிரதி/ உதவி கல்வி வெளியீடுகள் ஆணையாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 15 | வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் II ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 16 | பிரதி அதிபர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 17 | மாகாணக் கல்வி அமைச்சுக்களின் பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 18 | மாகாணக் கல்வி திணைக்களங்களில் பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த விசேட பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 19 | வலய பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த விசேட பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 20 | கோட்டக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி. சேவையின் தரம் II/ III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 21 | பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர் (மாகாணக் கல்வி அபிவிருத்தி நிலையம்) (வட மத்திய, சபரகமுவ) | இ.க.நி.சே. தரம் II/III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் |
| 22 | பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி வள நிலையம்) (மேல் மாகாணம்) | இ.க.நி.சே. தரம் II/III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல். |
| 23 | மாகாணப்பாடசாலை அதிபர்(தென்,மேல் மாகாணம்) | இ.க.நி.சே. தரம் II/III ஐச் சேர்ந்த பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் |

**குறிப்பு**: மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் முறைமை அட்டவணை "5" இல் காட்டப்பட்டுள்ளது.

*12.* **சேவைக்குரித்தான நிபந்தனைகள் :**

*12.1* **சேவையில் நிரந்தரமாக்கலுக்கான நிபந்தனை:**

**12.1.1** திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

(i) முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல்.

(ii) இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் 9.1 இல் காட்டப்பட்டுள்ள உரிய அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியெய்துதலும், 9.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு இணைப்பு மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளலும்.

(iii) தகுதிகாண் காலப்பகுதியில் தமது கடமைகளையும், நடத்தையையும் திருப்திகரமான முறையில் பேணிச் சென்ற உத்தியோகத்தர்கள், தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியில் இலங்கை கல்வி நிருவாக சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

12.1.2 மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை மூப்பு, திறமை அடிப்படையிலான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர், ஒரு (01) வருட பதில் கடமை மேற்கொள்வார். (பதில் கடமைபுரியும் காலத்தினுள் தமது கடமைகளையும், நடத்தையையும் திருப்திகரமான முறையில் பேணிச் சென்றிருப்பின், இலங்கை கல்வி நிருவாக சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்.

*12.2* **பயிற்சியும் அபிவிருத்தியும் :**

**முன்சேவைப் பயிற்சி:**

சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரும் கல்விச் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற சேவைப் பயிற்சி நிலையமொன்றின் மூலம் முன்சேவைப் பயிற்சியொன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும். பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் உத்தியோகத்தர்கள், அவர்கள் ஏற்கனவே அரச சேவையில் வகித்த பதவிகளுக்கு திருப்பி அனுப்பப்படவோ அல்லது சேவை முடிவுறுத்தப்படவோ முடியும்.

**முன்சேவைப் பயிற்சிக் காலம் பின்வருமாறு:**

(i) திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு – 12 மாதங்கள்.

(ii) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு – 03 மாதங்கள்.

(iii) சேவை மூப்பு, திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு – 02 மாதங்கள்.

**குறிப்பு:** செயன்முறைப் பயிற்சியைக் கொண்ட இப் பயிற்சி நிகழ்ச்சி, கல்வி அமைச்சின் பணிப்புரைகளினதும், மேற்பார்வையினதும் கீழ், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும்.

*12.3* **விடுவிப்பதற்கான நிபந்தனை:**

இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் இந்த சேவைக்காக மாகாண அரச சேவைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு சேவையை ஆற்றுவதற்காக கடமைப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மாகாண அரச சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்படுவர். அவ்வாறு சேவை மேற்கொள்ள வேண்டியது என்பதை தீர்மானிப்பது சேவையின் அவசியத்தின் பேரில் ஆளணியினரை ஈடுபடுத்தும் அதிகாரிகளுக்கிடையிலான ஏற்றுக்கொள்ளப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும்.

(i) உரிய மாகாண அதிகாரியினால் மாகாணத்தினுள் நியமிப்பது மற்றும் இடமாற்றம் மேற்கொள்ளல்.

(ii) மாகாண அரச சேவைக்காக விடுவித்தலும் அக்காலத்தினுள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிருவாகத்தின் கீழ் இருத்தல்.

(iii) மாகாண அரச சேவைக்காக விடுவிக்கப்பட்ட கால முடிவில் நிலையான பதவிக்கு மீள வருதல் வேண்டும்.

*12.4* **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலும், தரங்களுக்கு பதவியுயர்த்தலும் :**
இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள முறைகளின் கீழ் மட்டுமே சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தலும், தரங்களுக்கு பதவியுயர்த்தலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*12.5* சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இச் சேவைப் பிரமாணக் குறிப்பில் அட்டவணை "அ" வில் காட்டப்பட்டுள்ள பதவிகளை வகிக்க முடியுமென்பதுடன், இவ் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

*12.6* இந்த சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு ஏற்ப அவசியமான தேர்ச்சிகளையும் திறன்களையும் சகல உத்தியோகத்தர்களினாலும் உரியவாறு பெறுதல் வேண்டும்.

*13.* **பொருள்கோடலும், வரைவிலக்கணமும் :**

(i) "சேவை" எனும் பதம் இலங்கை கல்வி நிருவாக சேவை எனப் பொருள்படும்.

(ii) "பிரமாணக் குறிப்பு" எனும் பதம் இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

(iii) "வர்த்தமானி" எனும் பதம் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை எனப் பொருள்படும்.

(iv) "குறித்துரைக்கப்பட்ட பாடம்" எனும் பதம் விசேட பதவியணியின் கீழ் அட்டவணை அ-1 இன் கீழ் விண்ணப்பிக்கப்படுகின்ற பாடங்களை பட்டப் படிப்பில் பிரதான பாடங்களாக பின்பற்றியிருத்தல் எனவும், மொத்தப் பாட அலகுகளின் எண்ணிக்கையில் 1/3 யேனும் விண்ணப்பிக்கப்படுகின்ற பாடத்திற்குரியதாகப் பின்பற்றியிருத்தல் எனவும் பொருள்படும்.

(v) "குறித்த துறை" எனும் பதம் கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட துறை எனப் பொருள்படும்.

(vi) "செயலாளர்" எனும் பதம் பொதுவான கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

(vii) "செயலூக்கமிக்க சேவைக் காலம்"என்பது தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்ற நிலையில் உண்மையாகவே கடமையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும். செயலூக்கமிக்க காலப்பகுதியாகக் கருதப்பட வேண்டுமென அமைச்சரவையினால் கொள்கை அடிப்படையில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக்காலம் தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற லீவுக் காலப்பகுதிகளும் செயலூக்கமிக்க காலப்பகுதிக்காக கணக்கிடப்படமாட்டாது.

(viii) "அமைச்சு" எனும் பதம் பொதுவான கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சு எனப் பொருள்படும்.

(ix) "போதனாவியல் டிப்ளோமா" எனும் பதம் கல்வி அமைச்சின் கீழுள்ள கல்விக் கல்லூரியொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட போதனாவியல் டிப்ளோமா எனப் பொருள்படும்.

(x) "ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்" எனும் பதம் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்குக் குறையாத நிறுவக ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியொன்று அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொலைக்கல்வி ஊடாக பின்பற்றப்பட்ட மூன்று வருடங்களுக்குக் குறையாத ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியொன்று எனப் பொருள்படும்.

(xi) "இ.க.நி.சே." எனும் பதம் இலங்கை கல்வி நிருவாக சேவை எனப் பொருள்படும்.

*14.* **சேவையில் உள்ளோரை உள்ளீர்த்தல்:**

*14.1* **சேவையில் உள்ளோரை உள்ளீர்த்தல்:**

இந்த விதிமுறைகள் அமுலாக்கப்படும் திகதியில் சேவையிலுள்ளவர்களுக்கு மாத்திரம் பொருந்தும். குறித்த திகதிக்கு பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 06/2006 மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சுற்றுநிருபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள SL-01-2006 சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் சம்பளம்பெறுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் தாபனக்கோவையின் VIIவது அத்தியாயத்தின் 04 வது வகுதியின் அம்சங்களுக்கேற்ப பின்வருமாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

சேவைக் காலம் கணக்கிலெடுக்கப்படுவது ஒவ்வொரு பதவிகளுக்கும் நியமிக்கப்பட்ட தினத்தின் அடிப்படையிலேயேயாகும். எவ்வாறாயினும் உள்ளீர்ப்புக் காரணமாக உரிய உத்தியோகத்தரின் சம்பள உயர்வு திகதியில் எந்தவிதமான மாற்றமும் இடம்பெறாது என்பதுடன் அத்தினம் உள்ளீர்ப்புக்கு முன்புள்ள சம்பள ஏற்ற திகதியாக எந்தவித மாற்றமுமில்லாமல் அமுலாக்கப்படும். அவ்வாறு சம்பள மாற்றத்தின் போது உரியவர் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பள படி புதிய சம்பள அளவுக்கு சமாந்தரமாக தாபனக் கோவையின் VII வது அத்தியாயத்தின் 4.4 வகுதியின் பிரகாரம் அடுத்த சம்பள உயர்படியில் வைத்தல் இடம்பெறக் கூடாது.

(அ) அமுலுக்கு வரும் திகதிக்கு இலங்கை கல்வி நிருவாக சேவையின் வகுப்பு III இல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கும்,

(ஆ) அமுலுக்கு வரும் திகதிக்கு இலங்கை கல்வி நிருவாக சேவையின் வகுப்பு II இல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இற்கும்,

(இ) அமுலுக்கு வரும் திகதிக்கு இலங்கை கல்வி நிருவாக சேவையின் வகுப்பு I இல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I இற்கும் உள்ளீர்க்கப்படுவர்.

**குறிப்பு**: இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் தவிர, வேறெந்த விதத்திலும் இச் சேவைக்கு உள்ளீர்த்தல் மேற்கொள்ளப்பட மாட்டாது.

15. **இடைக்கால ஏற்பாடுகள்:**

இடைக்காலம் 2017, டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

15.1 **விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல்.**
இடைக்காலத்தினுள் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தும் போது, III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியது கட்டாயமில்லை.

15.2 **தரம் I இற்கு பதவியுயர்த்தல் :**

இடைக்கால ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் தரம் I இற்கு பதவியுயர்த்தும் போது, 2007, மார்ச் 30 ஆந் திகதிய 1490/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி ஊடாக இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

15.3 **தரம் II இற்கு பதவியுயர்த்தல் :**

இடைக்கால ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் தரம் II இற்கு பதவியுயர்த்தும் போது, 2002, மார்ச் 01 ஆந் திகதிய 1225/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

15.4 **சேவை மூப்பு, திறமை அடிப்படையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது, இடைக்கால ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் உச்ச வயதெல்லை 58 வயது வரை விண்ணப்பிக்கலாம்.**

15.5 **இடைக்கால ஏற்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் பதவியுயர்வுக்காக திறன் விருத்தியில் எய்திருக்க வேண்டியது கட்டாயமன்று.**

16. ஒவ்வொரு நியமனம் தொடர்பாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடவடிக்கைமுறை விதிகளில் காட்டப்பட்டுள்ள பொது நிபந்தனைகளும் மற்றும் தாபனவிதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும்.

17. இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின், அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

## அட்டவணை 'அ'

### சேவைக்குரிய பதவிகள்

| தொடர் இல | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் பெயர் | | | |
|---|---|---|---|---|---|
| | | விசேட தரம் | தரம் I | தரம் II | தரம் II/III |
| 1 | கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (பண்புசார் அபிவிருத்தி) | 01 | | | |
| 2 | கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு) | 01 | | | |
| 3 | பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் | 01 | | | |
| 4 | கல்வி வெளியீடுகள் ஆணையாளர் நாயகம் | 01 | | | |
| 5 | பிரதான ஆணையாளர் | | 01 | | |
| 6 | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | | 09 | | |
| 7 | அதிபர் | | 64 | | 84 (பொதுவான பதவியணி) |
| 8 | கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் | | 35 | | |
| 9 | கல்வி சேவைகள் அமைச்சின் கல்விப் பணிப்பாளர் | | 03 | | |
| 10 | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் | | 19 | | |
| 11 | வலயக் கல்விப் பணிப்பாளர் | | 97 | | |
| 12 | பரீட்சைகள் ஆணையாளர் | | 08 | | |
| 13 | கல்வி வெளியீடுகள் ஆணையாளர் | | 02 | | |
| 14 | மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் | | | 40 | |
| 15 | வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் | | | 388 | |
| 16 | கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் | | | | 92 (பொதுவான பதவியணி -49 விசேட பதவியணி - 43) |
| 17 | கல்வி சேவைகள் அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் | | | | 07 (விசேட பதவியணி) |
| 18 | பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர்/உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் | | | | 64 (பொதுவான பதவியணி) |
| 19 | பிரதி கல்வி வெளியீடுகள் ஆணையாளர் / உதவி கல்வி வெளியீடுகள் ஆணையாளர் | | | | 38 (பொதுவான பதவியணி - 08 விசேட பதவியணி - 30) |
| 20 | அதிபர் / பிரதி அதிபர் | | | | 148 (பொதுவான பதவியணி) |
| 21 | மாகாணக் கல்வி அமைச்சுக்களின் பிரதி / உதவிப் பணிப்பாளர் | | | 01 | 08 (பொதுவான பதவியணி) |
| 22 | மாகாணக் கல்வித் திணைக்கள பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட பதவியணி) | | | | 130 (விசேட பதவியணி) |
| 23 | வலய பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட பதவியணி) | | | | 1,057 (விசேட பதவியணி) |
| 24 | கோட்டக் கல்விப்பணிப்பாளர் | | | | 329(பொதுவான பதவியணி) |
| 25 | பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வி அபிவிருத்தி நிலையங்கள் (வட மத்திய - 01 / சப்ரகமுவ - 02) | | | | 03 (பொதுவான பதவியணி) |
| 26 | பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வி அபிவிருத்தி நிலையங்கள் (மேல் மாகாணம்) | | | | 04 (பொதுவான பதவியணி) |
| 27 | மாகாணப் பாடசாலை அதிபர் (தென் -12/ மேல் - 44) | | | | 56 (பொதுவான பதவியணி) |
| | மொத்தம் | 04 | 238 | 429 | 2020 |
| | கூட்டு மொத்தம் | | | 2,691 | |

**அட்டவணை 'ஆ'**

**விசேட பதவியணிக்குரிய பாடத் துறைகள்**

| | பாடம் | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|---|
| 1. | சிங்களம் | (i) குறித்த பாடத்திற்குரிய பட்டம் அல்லது பட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த பாடத்தைப் பிரதான பாடமாக பின்பற்றியிருத்தல். மொத்தப் பாட அலகுகளின் எண்ணிக்கையில் 1/3 பகுதியையேனும் விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாகப் பின்பற்றியிருத்தல்.<br>(ii) குறித்த பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழை அல்லது குறித்த பாடத்திற்குரிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>(நேர்முகப் பரீட்சையின்போது சான்றிதழ்கள் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும்.) |
| 2. | தமிழ் | |
| 3. | ஆங்கிலமும் பிற மொழிகளும் | |
| 4. | கணிதம் | |
| 5. | விஞ்ஞானம் | |
| 6. | வணிகக்கல்வி | |
| 7. | தகவல் தொழில்நுட்பம் | |
| 8. | உடற்கல்வி | |
| 9. | பௌத்த சமயம் | |
| 10. | கிறிஸ்தவ சமயம் | |
| 11. | இந்து சமயம் | |
| 12. | இஸ்லாமிய சமயம் | |
| 13. | மாணவர் அறிவுரையும் வழிகாட்டலும் | |
| 14. | அழகியற் கலை | குறித்த பாடத்திற்குரிய பாடமாக இருப்பது சித்திரம், நடனம், கீழைத்தேய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், நாடகமும் அரங்கியலும் பாடத்துறையில் பெற்ற பாடமாகும். |
| 15. | தொழில்நுட்பவியல் (உயிரியல் தொழினுட்பம் மற்றும் பொறியியல் தொழினுட்பம்) | (i) விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது மனையியல், நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம், மொழித்திறன் தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல்<br>(ii) தொழினுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழினுட்பவிடயப் பாடப்பரப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்பவியல் பட்டம் அல்லது இயந்திரவியல் கட்டுமானம் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போன்ற துறைகளில் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர்தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழினுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழினுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமாவை (NDES) பெற்றிருத்தல். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழினுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழினுட்ப தகைமை மட்டம் 6 க்குரிய உயர் டிப்ளோமா NVQ Level 6) பெற்றிருத்தல். |
| 16. | விசேட கல்வி | (i) விசேட கல்வி தொடர்பான கல்விமாணி, கல்வி முதுமாணி, கலைமாணிப்பட்டம் பெற்றிருத்தல்.<br>(ii) விசேட கல்வி தொடர்பாக அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றிலிருந்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்<br>(iii) தேசிய கல்விக் கல்லூரியொன்றின் மூலம் விசேட கல்வி தொடர்பான போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல் |

**அட்டவணை 'ஆ'** *(தொடர்ச்சி)*

| | பாடம் | | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|---|---|
| 17. | திட்டமிடல் | | கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமாகப் பின்பற்றி அதில் சித்தியெய்தி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் எந்தவொரு பட்டத்தையும் பெற்றிருத்தல் |
| | | | பாடங்கள்<br>❖ புள்ளி விபரவியல்<br>❖ கணிதம்<br>❖ முகாமைத்துவம்<br>❖ கல்வியியல், மூலதத்துவங்கள், ஒப்பீட்டுக் கல்வி<br>❖ சமூகவியல்<br>❖ உயிரியல்<br>❖ பௌதீகவியல்<br>❖ பொருளியல் |
| 18. | ஆரம்பக் கல்வி | (i) | ஆரம்பக் கல்வி தொடர்பான கல்விமாணி, கல்வி முதுமாணி, கலை முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல் |
| | | (ii) | ஆரம்பக் கல்வி தொடர்பாக அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றிலிருந்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் |
| | | (iii) | தேசிய கல்விக் கல்லூரியொன்றின் மூலம் ஆரம்பக் கல்வி தொடர்பான கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல் |
| 19. | வரலாறு | | வரலாற்றைப் பாடமாகக் கொண்ட பட்டம் பெற்றிருத்தல் |

**அனுபந்தம் '1'**

1. பரீட்சையின் பெயர் : **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சை**

2. பரீட்சை பற்றிய விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| கிரகித்தல் | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| நுண்ணறிவு | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | நேரம் 01 மணித்தியாலம் | 100 | 40 |
| கட்டுரையும், சுருக்கம் எழுதுதலும் | நேரம் 01 1/2 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : தேவையின் பொருட்டு
5. பரீட்சைக்கான பாடத் திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| கிரகித்தல் | பரீட்சார்த்திக்கு குறுகிய பல வசனங்கள் முன்வைக்கப்படும். ஒருசில வசனங்கள் தொடர்பில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுகள் பல முன்வைக்கப்படுவதுடன், அவற்றுள் ஒன்று அவ் வசனத்தில் உள்ள விடயங்களுடன் மிகப் பொருந்தும். மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்யுமாறு பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்படும். வழங்கப்பட்ட எல்லா வசனங்களினதும் கருத்தை பரீட்சார்த்தி புரிந்து கொள்ளும் விதத்தைப் பரீட்சிப்பதற்காக இவ் வினாக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றலை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமாகும். |
| பொது அறிவு | இலங்கையில் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதாரச் சூழல், கல்வித் திட்டம் உள்ளிட்ட பரீட்சார்த்தி வாழும் சூழல், வேலை செய்யும் சூழல், தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தற்கால நிகழ்வுகள், அதே போன்று விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமாகும். |
| கட்டுரையும் சுருக்கம் எழுதுதலும் | கட்டுரை எழுதுவதற்காக தற்கால நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட தலைப்பொன்று வழங்கப்படும். கட்டுரையின் உள்ளடக்கம், விடயங்களை ஒழுங்குபடுத்தி சமர்ப்பிக்கும் முறை, மொழிநடை, பரீட்சார்த்தியிடம் காணப்படுகின்ற பொது அறிவும் நுண்ணறிவும், சிந்திக்கும் ஆற்றல், கருத்துகளை முன்வைக்கும் ஆற்றல் என்பன மதிப்பீடு செய்யப்படும். ஒட்டு மொத்த கட்டுரையினதும் ஒழுங்கமைப்பு, தெளிவாக சுருக்கி முன்வைத்தல் என்பவற்றின் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.<br>வழங்கப்படுகின்ற பந்தியை அல்லது பந்திகளை சுருக்கி எழுதுதல் வேண்டும். |

6. 6.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

6.2 பரீட்சார்த்திக்கு தான் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
(பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

6.3 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நான்கு வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

## அனுபந்தம் '2'

1. பரீட்சையின் பெயர் : **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை**

2. இப் போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| 1. பொது அறிவும் நுண்ணறிவும் | நேரம்: 01 ½ மணித்தியாலம் | 100 | 40 |
| 2. ஒப்பீட்டுக் கல்வி | நேரம்: 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. கல்வி நிருவாகமும் முகாமைத்துவமும் | நேரம்: 01 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : தேவையின் பொருட்டு

5. பரீட்சைக்கான பாடத் திட்டம்

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| பொது அறிவும் நுண்ணறிவும் | நுண்ணறிவுப் பரீட்சை வினாக்கள் மூலம் பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றலை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இலங்கையில் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதாரச் சூழல், கல்வித் திட்டம் உள்ளிட்ட பரீட்சார்த்தி வாழும் சூழல், வேலை செய்யும் சூழல், தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தற்கால நிகழ்வுகள், அதே போன்று விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கு பொது அறிவு வினாக்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| ஒப்பீட்டுக் கல்வி | இலங்கையில் கல்விக் கொள்கைகள், கட்டமைப்புகள், அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டுள்ள விதம், அண்மைக்கால எழுச்சிகள், பிற நாடுகளின் கல்வி முறைமைகள் தொடர்பிலான அறிவை ஒப்பீட்டளவில் மதிப்பீடு செய்வதற்கு இவ் வினாப் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| கல்வி நிருவாகமும், முகாமைத்துவமும் | கல்வி நிருவாகம்/ முகாமைத்துவத் துறையில் எழக் கூடிய ஒருசில சம்பவங்களை முன்வைத்து, அச் சம்பவங்களுக்குப் பதில் அளித்தல், பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு, ஆற்றலைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டு வினாக்கள் முன்வைக்கப்படும். |

6. 6.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

6.2 பரீட்சார்த்திக்கு தான் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
(பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

6.3 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மூன்று வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

**அனுபந்தம் '3'**

1. பரீட்சையின் பெயர் : **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்கான சேவை மூப்பு, திறமை அடிப்படையிலான போட்டிப் பரீட்சை**

2. இப் போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| ஒப்பீட்டுக் கல்வி | நேரம்: 01 மணித்தியாலம் | 100 | 40 |
| கல்வி நிருவாகம் தொடர்பான விடய ஆய்வு | நேரம்: 01 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : தேவையின் பொருட்டு

5. பரீட்சைக்கான பாடத் திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| ஒப்பீட்டுக் கல்வி | இலங்கையில் கல்விக் கொள்கைகள், சட்டங்கள், சட்ட திட்டங்கள், கல்வி நிறுவகங்களின் பணிகள், அண்மைக்கால கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும், சர்வதேச எழுச்சிகளும் என்பன தொடர்பில் ஒப்பீட்டளவில் மதிப்பீடு செய்வதற்கு இவ் வினாப் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| கல்வி நிருவாகம் தொடர்பான விடய ஆய்வு | கல்வி நிருவாகம்/ முகாமைத்துவத் துறையில் எழக் கூடிய ஒருசில சம்பவங்களை முன் வைத்து, அச் சம்பவங்களுக்குப் பதில் அளித்தல், பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு, ஆற்றலைப் பரிட்சிப்பதை நோக்காகக் கொண்டு வினாக்கள் முன்வைக்கப்படும். |

6. 6.1 இப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

6.2 பரீட்சார்த்திக்கு தான் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
(பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

6.3 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்

**அனுபந்தம் '4'**

**இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற I வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை, II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை, III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளுக்கான பாடத் திட்டம்**

1. பரீட்சையின் பெயர் : **I வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை**

2. பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| பொதுவான நிருவாகம் | நேரம்: 03 மணித்தியாலம் | 100 | 40 |
| நிதிப் பிரமாணங்கள் | நேரம்: 03 மணித்தியாலம் | 100 | 40 |
| கல்விச் சட்டம், நிருவாகம், மதிப்பீடு. | நேரம்: 03 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : ஆண்டொன்றிற்கு இரண்டு தடவைகள்

5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. பொது நிருவாகம் | (அ) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பும், அதற்கு முன்பிருந்த 1972, 1947 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளும்.<br>▪ சிறுவர் உரிமைகள் தொடர்பான பட்டயம்<br>▪ மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்.<br>▪ இலஞ்சம் அல்லது ஊழல் சட்டம்.<br>(ஆ) அலுவலக மற்றும் வெளிக்கள நிறுவக அமைப்பு முறைகள் மற்றும் தாபனவிதிக் கோவையிலுள்ள அத்தியாயங்கள் (காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உட்பட).<br>VII, IX, X, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XLVII, XLVIII<br>(இ) அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகள். |
| 2. நிதிப் பிரமாணங்கள் | (அ) அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் பகுதி I (அத்தியாயம் I தவிர காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட திருத்தங்கள் உட்பட)<br>(ஆ) நடப்பு வருடத்தில் வருமான, செலவு மதிப்பீடு.உதாரணம்: அவற்றின் கட்டமைப்பு, வருமானத் தலைப்பு,நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்.<br>(இ) கல்வி அலுவலகங்கள் நிறைவேற்றும் குறித்துரைக்கப்பட்ட கணக்கு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கட்டளைச் சட்டங்களும், பிற சட்டங்களும், நியதிச் சட்டங்களும். |
| 3. கல்விச் சட்டம், நிருவாகமும் மதிப்பீடும் | (அ) கல்வியுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள்.<br>• 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கக் கல்விக் கட்டளைச் சட்டம்.<br>• 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.<br>• 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.<br>• 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.<br>• அரசாங்கப் பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு.<br>• 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கல்லூரிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.<br>• 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) சட்டம்.<br>• 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்விச் (பதவிப் பெயர் மாற்றச்) சட்டம்.<br>• 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கல்லூரிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.<br>• 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்.<br>• 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பொதுப் பரீட்சைகள் சட்டம்.<br>• 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டம்.<br>• தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை (பரீட்சையை அண்மித்த மூன்று வருடங்களுக்குள்)<br>• வசதிக் கட்டணங்களும், சேவைகள் கட்டணமும்.<br>• பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகள். |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| | (ஆ) கல்வி நிருவாகம்<br>1. (i) கல்வி அமைச்சு<br>(ii) மாகாணக் கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சின் கீழுள்ள திணைக் களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பும், பணிகளும்.<br>(iii) தேசிய, மாகாண மட்டத்தில் கல்வி நடவடிக்கைளைத் திட்டமிடலும், பொதுவான நோக்கங்களும் (பாடசாலை திட்ட வரைபு உள்ளிட்ட) அமுல் செய்தல் முதலியன.<br>2. பாடசாலை முகாமைத்துவமும், பாடசாலைச் சமூக தொடர்புகளும்.<br>3. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை. (EMIS)<br>4. விசேட கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், முறைசாராக் கல்வி நடவடிக்கைகள், பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம்.<br><br>(இ) மதிப்பீடு<br>• ஆசிரியர்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற அளவுகோல்கள்.<br>• பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு.<br>• பாடசாலை சுய மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்.<br>• வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள், கல்வி அமைச்சு என்பவற்றின் மூலம் பாடசாலைகளை மேற்பார்வை செய்தல்.<br>• வெளிக் குழுக்களினால் உள்ளக மதிப்பீடுகளை பரீட்சித்தல்.<br>(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கைந்நூல்கள் மற்றும் பிற வெளியீடுகள் தொடர்பில் சிறந்த தெளிவைப் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது). |

6.

6.1 உத்தியோகத்தரொருவருக்கு I வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

2. 1. பரீட்சையின் பெயர் : II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை

2. பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| கல்விக் கொள்கைகள் | நேரம்: 2 மணித்தியாலம் | 100 | 40 |
| விடயம்சார் கல்வி | நேரம்: 2 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : ஆண்டொன்றிற்கு இரண்டு தடவைகள்
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. கல்விக் கொள்கைகள் | இவ் வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.<br><br>(அ) பொதுவான கல்விக் கொள்கை –அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்கால கல்வி வெளியீடுகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்காக வினாக்கள் தயாரிக்கப்படும். கொள்கைகள் மூலம் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்களினால் தமது கடமைகளை நிறைவேற்றும் போது எழக் கூடிய பிரச்சினைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| | (ஆ) பாடசாலைப் பாடவிதானம் – பாடசாலை முறைமையில் பல்வேறு கட்டங்களிலும் பாடவிதானம் தொடர்பிலும் பாடவிதானத்தின் அடிப்படை நோக்கங்கள் தொடர்பிலும் பரீட்சார்த்தியிடமிருந்து பொதுவான கிரகிக்கும் தன்மை எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் உள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பில் பரீட்சார்த்திக்கு நல்ல தெளிவு இருக்க வேண்டுமென்பதுடன், அக் கோணத்தில் பாடவிதானம் தொடர்பில் விமர்சன வடிவில் கருத்துக்களை முன்வைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| 2. விடயம்சார் கல்வி | பரீட்சார்த்தியின் படைப்பாற்றல், தர்க்கிக்கும் சிந்தனா சக்தி, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் திறன் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும். |

6.

6.1 உத்தியோகத்தரொருவருக்கு II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய எல்லா வினாப் பத்திரங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

3. 1. பரீட்சையின் பெயர் : **III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை**

2. பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப் பத்திரம் | நேரம் | மொத்தப்புள்ளி | சித்திப்புள்ளி |
|---|---|---|---|
| 1. கொள்முதல் தொழிற்பாடு | நேரம்: 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. உயர் கணினிப் பாவனை | நேரம்: 03 மணித்தியாலம் | 100 | 40 |

3. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்
4. எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை : ஆண்டொன்றிற்கு இரண்டு தடவைகள்
5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. கொள்முதல் தொழிற்பாடு | அரசாங்கத்தின் கொள்முதல் தொழிற்பாடு (காலத்திற்குக் காலம் செய்யப்படுகின்ற திருத்தங்கள் உட்பட) தொடர்பாக அறிவைச் சோதித்தல். |
| 2. உயர் கணினிப் பாவனை | தகவல் முறைமை முகாமைத்துவம், தரவு முகாமைத்துவம், மென்பொருள் முகாமைத் துவம், தகவல் தொடர்பாடலும், வலையமயப்படுத்தலும் என்பன சார்ந்ததாக அறிவைச் சோதித்தல். |

6.

6.1 உத்தியோகத்தரொருவருக்கு III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய எல்லா வினாப் பத்திரங்களுக்கும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

6.2 தகவல் தொழில்நுட்ப பட்டப்பின் படிப்புப் பட்டத்தைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

## அனுபந்தம் '5'

| தொடர் இல. | பதவி | தகைமைகள் | தெரிவு செய்யப்படும் முறைமை |
|---|---|---|---|
| 1 | கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் | இ.க.நி.சே. விசேட தரத்தின் உத்தியோகத்தராயிருத்தல் | விசேட தரத்தின் உத்தியோகத்தராயின் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். |
| 2 | பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் | இ.க.நி.சே. விசேட தரத்தின் உத்தியோகத்தராயிருத்தல் | |

| தொடர் இல. | பதவி | தகைமைகள் | தெரிவு செய்யப்படும் முறைமை |
|---|---|---|---|
| 3 | கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் | இ.க.நி.சே. விசேட தரத்தின் உத்தியோகத்தராயிருத்தல் | |
| 4 | பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) | இ.க.நி.சே. தரம் I இல் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றுள்ளமை | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள்ளப்படும்) |
| 5 | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் I இல் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றுள்ளமை | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படும் உறுப்பினர் உள்ளடங்கலாக)(அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள்ளப்படும்) |
| 6 | கல்விப் பணிப்பாளர் (கல்வி அமைச்சு) | இ.க.நி.சே. தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித்திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள் ளப்படும்) |
| 7 | மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 8 | வலயக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 9 | பரீட்சை ஆணையாளர் | இ.க.நி.சே. தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள்ளப்படும்) |
| 10 | கல்வி வெளியீட்டு ஆணையாளர் | இ.க.நி.சே. தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள்ளப்படும்) |

| தொடர் இல. | பதவி | தகைமைகள் | தெரிவு செய்யப்படும் முறைமை |
|---|---|---|---|
| 11 | அதிபர் | இ.க.நி.சே. தரம் I/II/III பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 3 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் செய்யப்படும் சிபார்சிற்கிணங்க அரச சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படும். (அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் புள்ளித் திட்ட முறைமைக்கிணங்க இந்த சிபார்சு மேற்கொள்ளப்படும்) |
| 12 | பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அமைச்சு) | இ.க.நி.சே. தரம் II/III ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | கல்விச் செயலாளர் |
| 13 | பிரதிப் பரீட்சை ஆணையாளர்/உதவிப் பரீட்சை ஆணையாளர் | இ.க.நி.சே. தரம் II/III பொதுச் சேவை ஆளணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | கல்விச் செயலாளர் |
| 14 | பிரதி /உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் | இ.க.நி.சே. தரம் II/III ஐச் சேர்ந்த உத்தியோகத்தராயிருத்தல் | கல்விச் செயலாளர் |
| 15 | வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் II பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 16 | பிரதி அதிபர் | இ.க.நி.சே. தரம் II/III பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | கல்விச் செயலாளர் |
| 17 | மாகாணப் பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர் (பொதுச் சேவை ஆளணி) | இ.க.நி.சே. தரம் II/III பொதுவான பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 18 | மாகாணப் பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட சேவை ஆளணி) | இ.க.நி.சே. தரம் II/III விசேட பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 19 | வலய உதவி / பிரதிக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் II/III விசேட பதவியணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 20 | கோட்டக் கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே. தரம் II/III பொதுச் சேவை ஆளணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 21 | பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (மாகாணக் கல்வி அபிவிருத்தி நிலையம்) (வட மத்திய, சப்பிரகமுவ) | இ.க.நி.சே. தரம் II/III பொதுச் சேவை ஆளணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 22 | பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி வள நிலையம்) (மேல் மாகாணம்) | இ.க.நி.சே. தரம் II/III பொதுச் சேவை ஆளணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |
| 23 | மாகாணப் பாடசாலை அதிபர் (தெற்கு, மேல் மாகாணம்) | இ.க.நி.சே. தரம் II/III பொதுச் சேவை ஆளணிக்குரிய உத்தியோகத்தராயிருத்தல் | மாகாணக் கல்வி அதிகாரி |

**அனுபந்தம் '6'**

**இலங்கை கல்வி நிருவாக சேவைக்குரிய திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறி**

*(1)* **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III**

*தேசிய கல்வி நிறுவகத்தினால் அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம், கல்வி நிருவாகமும், முகாமைத்துவமும் தொடர்பான திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.*

**பாடநெறியின் உள்ளடக்கம்**

- *பொதுவான கல்விக் கொள்கைகள்.*
- *கல்வி தொடர்பில் சர்வதேச எழுச்சிகள்.*
- *கல்வி முகாமைத்துவமும், தலைமைத்துவமும் தொடர்பான மூலதத்துவங்களும், விடயம்சார் கற்கையும்.*
- *கல்வி நிறுவனங்களின் உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான மூலதத்துவங்களும், விடயம்சார் கற்கையும்.*
- *கல்வி தொடர்பான கருத்திட்ட யோசனைகளை வகுத்தல்.*

*(2)* **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II**

*தேசிய கல்வி நிறுவகத்தினால் அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம், கல்வி நிருவாகமும், முகாமைத்துவமும் தொடர்பான திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.*

**பாடநெறியின் உள்ளடக்கம்**

- *கல்வி முறைமையில் மனித, பௌதீக வள முகாமைத்துவம்.*
- *கொள்முதல் முகாமைத்துவமும், தொழில்நுட்ப மதிப்பீடும்.*
- *கல்வி நிறுவனங்களின் கணக்காய்வு, ஒழுக்கம் தொடர்பான விடய ஆய்வு.*
- *கல்வி ஆராய்ச்சி, கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பகுப்பாய்வு ரீதியிலான விவரண அறிக்கைகளைத் தயாரித்தல்.*
- *பாடவிதான அபிவிருத்தி.*

*(3)* **இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I**

*தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம், கீழ்க் காட்டப்பட்ட 02 அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களை உள்ளடக்கிய 100 மணித்தியாலங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.*

**பாடநெறியின் உள்ளடக்கம்**

- *கல்வி நிருவாகமும், முகாமைத்துவமும்.*
- *கல்விக் கொள்கைப் பகுப்பாய்வு.*
- *கல்வித் தரநிர்ணயங்கள்.*
- *கல்வி ஆராய்ச்சிகள்.*
- *உயர் மட்ட தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன்கள்.*
- *ஆசிரியர் கல்வி.*
- *பாடவிதான அபிவிருத்தி.*

**அனுபந்தம் '7'**

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்குரிய ஆங்கில மொழிப் பரீட்சை**

Scheme of Evaluation: Written Examination

Content

**English Grammar**

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken and the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/ Compound/ Complex/ Compound complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

**Writing Skills**

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Essay Writing
- Summary writing skills
- Report writing skills
- Letter writing

**Reading Skills**

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/ written interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of a printed text.
- Reading and interpretation (verbal/ written)

**அனுபந்தம் '8'**

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவியுயர்த்தல் மாதிரி விண்ணப்பப் படிவம்**

**பகுதி I**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு/ திருமதி/ செல்வி ..........................................................................................
(ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள்: ..................................................................
(இ) பெயரில் மாற்றங்கள் செய்திருப்பின் இதற்கு முன் பயன்படுத்திய பெயர்: ...............................................................................
(பெயரில் மாற்றம் செய்திருப்பின் மட்டும்)
2. பிறந்த திகதி: ..................................................................................................
3. தேசிய அடையாள அட்டை இல.: .....................................................
4. சொந்த முகவரி: ..............................................................................................................................................................
5. தற்போது சேவையாற்றும் அலுவலகம்/பாடசாலை : ...............................................................................................................
6. தொலைபேசி இலக்கம்:தனிப்பட்ட:......................... அலுவலகம் ....................................
7. தற்போது வகிக்கும் பதவி: ....................................................................................................................
8. 8.1 மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டிருப்பின் மாகாணம்: .....................................
வலயம்: .....................................
8.2 தேசிய பாடசாலையில் சேவையாற்றுவதாயின், பாடசாலைக்குரிய வலயம்: ....................................

9. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கான நியமனத் திகதி: ....................................

10. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட நியமனக் கடித இலக்கமும், திகதியும்:
..........................................................................................................................

11. பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ..................................................................................................

12. 1 வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியும், பரீட்சைச் சுட்டெண்ணும்: ................................................ .......................................................

13. சேவையில் பத்து (10) வருடம் பூர்த்தியாகும் திகதி: .................................................................

14. பதவியுயர்வுக்குக் கிட்டிய பத்து (10) வருட காலப்பகுதிக்குள் காட்டிய செயலாற்றுகை மட்டம்:

| வருடம் | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

15. இரண்டாவது அரசகரும மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்ட திகதி: ..........................................................................................

அக் கடிதத்தின் குறிப்பிலக்கமும், திகதியும்: ...............................................................................................

16. இச் சேவையில் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது/ கொள்ளப்படவில்லை.

(சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டிருப்பின் திகதிகளைக் குறிப்பிடுதல் வேண்டும்)

..........................................................................................................................................................

17. இணைப்பு மொழியில் சித்தியடைந்த திகதி அல்லது சித்தியடைய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்ட திகதி: ............................................................................................

அக் கடிதத்தின் குறிப்பிலக்கமும், திகதியும்: .......................................................................................

18. தரம் IIIதிறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த திகதி: ...............................

19. பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவில் சித்தியெய்திய திகதி: .............................................

........................................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இற்கு பதவியுயர்த்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி:- .............................................

..........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## பகுதி II

............................................. வலயக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல் திரு/திருமதி/செல்வியின் தரம் II இற்கு தரமுயர்த்தல் விண்ணப்பத்தை சிபார்சு செய்வதுடன் முன்னிலைப்படுத்துகிறேன்.

திகதி:- .............................................

..........................................................................
அதிபர்.

(தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக)

............................................ மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த திரு./ திருமதி/ செல்வி ........................... தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

(i) …...................... ஆம் திகதிக்கு பத்து (10) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.
(ii) பதவியுயர்வுக்குக் கிட்டிய பத்து (10) வருட காலப்பகுதியில் சாதாரண மட்டத்தை அல்லது அதை விடக் கூடிய செயலாற்றுகையைக் காட்டியுள்ளார்/ காட்டவில்லை.
(iii) அப் பத்து (10) வருட காலப்பகுதிக்குள் அரைச் சம்பள/ சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டுள்ளார்/ பெற்றுக் கொள்ளவில்லை.
(iv) இக் காலப்பகுதியில் எச்சரித்தல் தவிர எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/ உட்படுத்தப்பட்டுள்ளார்.
(v) இவ் உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை/எடுக்கப்பட்டுள்ளது.
(vi) இக் காலப்பகுதிக்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் ஈட்டியுள்ளார்/ஈட்டவில்லை.
(vii) ................................ ஆம் திகதியிலிருந்து பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது/ நிரந்தரமாக்கப்படவில்லை.
(viii) 1 வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில்……திகதி சித்தியெய்தியுள்ளார்/ சித்தியெய்தவில்லை.
(ix) இரண்டாவது அரசகரும மொழியில் சித்தியெய்த வேண்டிய தேவையை …..திகதி பூர்த்தி செய்துள்ளார்/பூர்த்தி செய்யவில்லை.
(x) இணைப்பு மொழியில் சித்தியெய்த வேண்டிய தேவையை ……..திகதி பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை.
(xi) தரம் IIIதிறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியைப் ……… திகதி பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை.
(xii) பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவில் ………. திகதி சித்தியெய்தியுள்ளார்/ சித்தியெய்தவில்லை.

இவ் உத்தியோகத்தரை .................................. ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ............................................. .........................................................................

வலயக் கல்விப் பணிப்பாளர்.

மாகாணக் கல்விச் செயலாளர்,
இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ............................................. .........................................................................

மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(மாகாண அரச சேவைக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக)

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ...................... .............................................................................................

மாகாணக் கல்விச் செயலாளர்/
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(* தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக)

**அனுபந்தம் '9'**

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை தரம் I இற்கு பதவியுயர்த்தல்**

**பகுதி I**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/ திருமதி/ செல்வி .........................................................................................
(ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள்: .........................................................................................

(இ) பெயரில் மாற்றங்கள் செய்திருப்பின் இதற்கு முன் பயன்படுத்திய பெயர்: .....................................................
(பெயரில் மாற்றம் செய்திருப்பின் மட்டும்)

2. பிறந்த திகதி: .................................................................................................

3. தேசிய அடையாள அட்டை இல.: ....................................................

4. சொந்த முகவரி: ...........................................................................................................................................................

5. தற்போது சேவையாற்றும் அலுவலகம்/ பாடசாலை :...........................................................................................................

6. தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட:........................ அலுவலகம் :....................................

7. தற்போது வகிக்கும் பதவி: .........................................................................................................................................

8. 8.1 மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டிருப்பின் மாகாணம்: ....................................
வலயம்: ....................................

8.2 தேசிய பாடசாலையில் சேவையாற்றுவதாயின், பாடசாலைக்குரிய வலயம்: .....................................

9. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கான நியமனத் திகதி: ...............................

10. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட நியமனக் கடித இலக்கமும், திகதியும்: ..............................
.......................................................................................

11. பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ..........................................................................................

12. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி: ....................

13. தரம்IIதிறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த திகதி: .....................................

14. II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியும், பரீட்சைச் சுட்டெண்ணும்: ...............................................

15. சேவையில் ஏழு (07) வருடம் பூர்த்தியாகும் திகதி: .....................................................................

16. பதவியுயர்வுக்குக் கிட்டிய ஏழு (07) வருட காலப்பகுதிக்குள் காட்டிய செயலாற்றுகை மட்டம்

| வருடம் | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

17. இ.க.நி. சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்புப் பட்டத்தின் பெயரும், செல்லுபடியாகும் திகதியும்: .......................................................................

......................................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I இற்கு பதவியுயர்த்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி:- .............................................
.........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

### பகுதி II

............................................. வலயக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II ல் திரு/திருமதி/செல்வியின் தரம் I இற்கு தரமுயர்த்தல் விண்ணப்பத்தை சிபார்சு செய்வதுடன் முன்னிலைப்படுத்துகிறேன்.

திகதி:- .............................................
.........................................................................
அதிபர்.

(தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக)

............................................. மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த திரு./ திருமதி/ செல்வி ........................... தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

i. …...................... ஆம் திகதிக்கு தரம் II இல் ஏழு (07) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.

ii. பதவியுயர்வுக்குக் கிட்டிய ஏழு (07) வருட காலப்பகுதியில் சாதாரண மட்டத்தை அல்லது அதை விடக் கூடிய செயலாற்றுகையைக் காட்டியுள்ளார்/ காட்டவில்லை.

iii. அவ் ஏழு (07) வருட காலப்பகுதிக்குள் அரைச் சம்பள/ சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டுள்ளார்/ பெற்றுக் கொள்ளவில்லை.

iv. இக் காலப்பகுதியில் எச்சரித்தல் தவிர எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/உட்படுத்தப்பட்டுள்ளார்.

v. இவ் உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை/எடுக்கப்பட்டுள்ளது.

vi. இக் காலப்பகுதிக்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் ஈட்டியுள்ளார்/ஈட்டவில்லை.

vii. ................................ ஆம் திகதியிலிருந்து பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது/நிரந்தரமாக்கப்படவில்லை.

viii. தரம்IIதிறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியைப்.........திகதி பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை.

ix. II வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில்.........திகதி சித்தியெய்தியுள்ளார்/ சித்தியெய்தவில்லை.

x. இ. க.நி. சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்புப் பட்டத்தைப் .........திகதி பெற்றுள்ளார்/ பெற்றில்லை.

இவ் உத்தியோகத்தரை ................................. ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ............................................ .........................................................................

வலயக் கல்விப் பணிப்பாளர்.

மாகாணக் கல்விச் செயலாளர்,

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ............................................ .........................................................................

மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(மாகாண அரச சேவைக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக)

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- ............................................ .........................................................................

மாகாணக் கல்விச் செயலாளர்/*மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(*தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக)

## அனுபந்தம் '10'

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல்**

### பகுதி I

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/ திருமதி/ செல்வி ........................................................................................
   (ஆ) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள்: ........................................................................................
   (இ) பெயரில் மாற்றங்கள் செய்திருப்பின் இதற்கு முன் பயன்படுத்திய பெயர்: ........................................................................
   (பெயரில் மாற்றம் செய்திருப்பின் மட்டும்)

2. பிறந்த திகதி: ..........................................................................................

3. தேசிய அடையாள அட்டை இல.: ....................................................

4. சொந்த முகவரி: ..........................................................................................

5. தற்போது சேவையாற்றும் அலுவலகம் / பாடசாலை :..........................................................................................

6. தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட:........................ அலுவலகம் :....................................

7. தற்போது வகிக்கும் பதவி: ..........................................................................................

8. 8.1 மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்டிருப்பின் மாகாணம்: ....................................
வலயம்: ....................................

8.2 தேசிய பாடசாலையில் சேவையாற்றுவதாயின், பாடசாலைக்குரிய வலயம்: ....................................

9. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கான நியமனத் திகதி: ................................

10. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட நியமனக் கடிதஇலக்கமும், திகதியும்: ..............................
..........................................................................................

11. பதவி நிரந்தரமாக்கப்பட்ட திகதி: ..........................................................................................

12. இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி:............

13 . III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியும், பரீட்சைச் சுட்டெண்ணும்: ........................................
................................................................

14. தரம் I திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த திகதி: .................................

15. சேவையில் தரம் I இல் ஐந்து (05) வருடம் பூர்த்தியாகும் திகதி: ......................................

16. பதவியுயர்வுக்குக் கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் காட்டிய செயலாற்றுகை மட்டம்:

| வருடம் | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

.......................................... ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி:- .............................................

..........................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## பகுதி II

............................................. மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த திரு./ திருமதி/ செல்வி ........................... தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

i. …...................... ஆம் திகதிக்கு தரம் I இல் ஐந்து (05) வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.

ii. பதவியுயர்வுக்குக் கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதியில் சாதாரண மட்டத்தை அல்லது அதை விடக் கூடிய செயலாற்றுகையைக் காட்டியுள்ளார்/ காட்டவில்லை.

iii. அவ் ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் அரைச் சம்பள/ சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டுள்ளார்/ பெற்றுக் கொள்ளவில்லை.

iv. இக் காலப்பகுதியில் எச்சரித்தல் தவிர எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/ உட்படுத்தப்பட்டுள்ளார்.

v. இவ் உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை/ எடுக்கப்பட்டுள்ளது.

vi. இக் காலப்பகுதிக்குரிய சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் ஈட்டியுள்ளார்/ஈட்டவில்லை.

vii. ................................ ஆம் திகதியிலிருந்து பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது/நிரந்தரமாக்கப்படவில்லை.

viii. III வது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் ............திகதி சித்தியெய்தியுள்ளார்/ சித்தியெய்தவில்லை.

ix. தரம் I திறன் விருத்திப் பயிற்சிப் பாடநெறியைப் ...............திகதி பூர்த்தி செய்துள்ளார்/ பூர்த்தி செய்யவில்லை.

இவ் உத்தியோகத்தரை .................................. ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- .............................................

.........................................................................
வலயக் கல்விப் பணிப்பாளர்.

மாகாணக் கல்விச் செயலாளர்,

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- .............................................

.........................................................................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(மாகாண அரச சேவைக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக)

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த இவ் உத்தியோகத்தரை ........................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ செய்யவில்லை.

திகதி:- .............................................

.........................................................................
மாகாணக் கல்விச் செயலாளர்/
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

(* தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக)

9-111

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.